# தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்

## 2006ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணைய (மின் கட்டணவீதம் நிர்ணயிப்பதற்கான விதிமுறைகள் மற்றும் வரையறைகள்) (திருத்தம்) ஒழுங்குமுறை விதிகள்.

**(ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டதன் தமிழாக்கம்)**

**[அறிவிக்கை எண் த.மி.ஒ.ஆ./TR / 5/ 2-1, 2006 மே 9ஆம் நாளிட்டது]**

**[கடித எண் த.மி.ஒ.ஆ./AD(T)/F. திருத்தம் /D.539/2006]**

முன்கூட்டியே சொல்ல முடியாத காரணத்தினால், நீர்மின் உற்பத்தியிலுள்ள ஏற்ற இறக்கத்தினைக் கவனத்திற்கொண்டு “நீர் மின் உற்பத்திச் சமநிலை நிதியம்” என்று வழங்கப்பெறும் நிதியத்தை உருவாக்குவது அவசியமெனக் கருதுவதாலும்,

அத்தகைய நிதியத்தை உருவாக்கவும், பயன்படுத்தவும் வகை செய்வதற்கு 2005ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணைய (மின் கட்டணவீதம் நிர்ணயிப்பதற்கான விதிமுறைகள் மற்றும் வரையறைகள்) ஒழுங்குமுறை விதிகளில் உள்ள, ஒழுங்குமுறை விதிகளைத் திருத்தம் செய்யும் ஒழுங்குமுறை விதிகளைப் பிறப்பிப்பது அவசியமெனக் கருதுவதாலும், மற்றும் திருத்தம் செய்யும் ஒழுங்குமுறை விதிகள் முந்திய வெளியீட்டின் வரையறைக்கு உட்பட்டிருப்பதாலும் அதற்கிணங்க அத்தகைய முந்திய வெளியீடுகள் ஏற்றுக்கொள்ளப்படலாகிறது என்பதாலும்,

இப்போது, அதற்காக, 2003ஆம் ஆண்டு மின்சாரச்சட்டத்தின், (மத்தியச் சட்டம் 36/2003) 61ஆம் பிரிவுடன் சேர்த்துப் படிக்கப்படும் 181ஆம் பிரிவின் படி அதற்கு வழங்கப்பட்ட அதிகாரங்களையும், மற்றும் இதன் பொருட்டு அதனை இயல்விக்கும் அனைத்து அதிகாரங்களையும் செலுத்தி, தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், இதன் மூலம், 2005 ஜுன் 24ம் நாளிட்ட அறிவிக்கை எண். த.மி.ஒ.ஆ./TR/5/2-ன் படி பிறப்பிக்கப்பட்ட, 2005ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணைய (மின் கட்டணவீதம் நிர்ணயிப்பதற்கான விதிமுறைகள் மற்றும் வரையறைகள்) ஒழுங்குமுறை விதிகளைத் திருத்தம் செய்யும் பின்வரும் ஒழுங்குமுறை விதிகளை குறித்துரைத்து, 2005 ஆகஸ்டு 3ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் பகுதி VI - பிரிவு 2 (பின்னிணைப்பு) இல் வெளியிடுகிறது :-

## திருத்தம் செய்யும் ஒழுங்குமுறை விதிகள்

1. குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம் :

(1) இந்த ஒழுங்குமுறைவிதிகள், 2006ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணைய (மின் கட்டணவீதம் நிர்ணயிப்பதற்கான விதிமுறைகள் மற்றும் வரையறைகள்) (திருத்தம்) ஒழுங்குமுறைவிதிகள், என்று வழங்கப்பெறும்.

(2) இந்த ஒழுங்குமுறை விதிகள், தமிழ்நாடு அரசிதழில் அவை வெளியிடப்பட்ட நாளன்று நடைமுறைக்கு வரும்.

2. இருந்து வரும் ஒழுங்குமுறை விதி 76–க்குப் பதிலாக, புதிய ஒழுங்குமுறை விதி 76–ஐ அமைத்தல்.

2005ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணைய (மின் கட்டணவீதம் நிர்ணயிப்பதற்கான விதிமுறைகள் மற்றும் வரையறைகள்) ஒழுங்குமுறைவிதிகளில் உள்ள 76ஆம் ஒழுங்குமுறைவிதிக்குப் பதிலாக, பின்வரும் புதிய ஒழுங்குமுறைவிதி அமைக்கப்படுதல் வேண்டும்; அதாவது :-

"76. நீர் மின் உற்பத்திச் சமநிலை நிதியம்".

(1) மோசமான வானிலையின் காரணமாக, நீர்மின் உற்பத்தியில் ஏற்படும் குறைவினால், மின்கொள்முதல் அளவு அதிகரிப்பதன் பொருட்டு, (நீர் மின் நிலையம் உள்ளடங்கலான மின் உற்பத்தி நிலையங்களைச் சொந்தமாகக் கொண்டிருக்கும்) மின் பகிர்வு உரிமம்தாரருக்கு ஏற்படும் நிதி இழப்பு எதனையும் கவனத்திற் கொண்டு "நீர் மின் உற்பத்திச் சமநிலை நிதியம்" என்று அழைக்கப்படும் நிதியம் உருவாக்கப்படுதல் வேண்டும்.

(2) வழக்கமான மழைக்காலத்தில் நீர்மின் உற்பத்தி நிலையங்களால் உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தின் சராசரிப் பங்கு, அந்த நிலையத்தின் சுமைக்காரணியின் 25 விழுக்காடு மொத்த சராசரியாக இருக்கும், மற்றும் உரிமம்தாரர், முந்திய ஆண்டின் மார்ச் 31 அன்றுள்ளவாறு, அனைத்து நிலையங்களின் மொத்த நிறுவு திறனின் P.L.F. 25விழுக்காட்டில் தம்முடைய நீர்மின் நிலையங்களிலிருந்து செய்யப்படும் மின் உற்பத்தியின் அளவை மதிப்பிடுதல் வேண்டும்.

(3) நீர் மின்உற்பத்தி ஒரு குறிப்பிட்ட ஆண்டில், 25 விழுக்காடு P.L.F-க்கு

மேற்படுகிற போது, அந்த ஆண்டில் மின்கொள்முதல், ஒரு மின் அலகுக்குக் கணக்கிடப்பட்ட நிரல் சராசரியில் நீர்மின் உற்பத்தியின் அத்தகைய மிகைக்கான மின்தொகைக்குச் சமமான தொகையானது, நீர் மின் உற்பத்திச் சமநிலை நிதியக் கணக்கில் பற்று எழுதுவதற்கு, நீர்மின் உற்பத்திச் சமநிலை நிதியத்தில் வரவு வைக்கப்படுதல் வேண்டும்.

(4) மின்பகிர்வு உரிமம்தாரர், அந்தத் தொகையை, ஒன்று எளிதாக மாற்றத்தக்க அரசுப் பிணையங்களில் முதலீடு செய்யலாம் அல்லது அதனை உள்–வள ஆதாரங்கள் போன்று பயன்படுத்தலாம்.

(5) அத்தகைய முதலீடுகளிலிருந்து பெறப்படும் வட்டியும் கூட, அந்த நிதியத்தில் வரவு வைக்கப்படும். அது உள்– வள ஆதாரங்களாகக் பயன்படுத்தப்படும் நேர்வில், இந்தியச் சேமவங்கியினால் அறிவிக்கை செய்யப்பட்ட வங்கி வீதத்திற்குச் சமமான வருவாய் அந்த நிதியத்தில் வரவு வைக்கப்படுதல் வேண்டும்.

(6) நீர் மின் உற்பத்தி ஒரு குறிப்பிட்ட ஆண்டில், 25 விழுக்காடு P.L.F-க்கு குறைகிற போது, அந்த ஆண்டில் மின்கொள்முதல் ஒரு மின் அலகுக்குக் கணக்கிடப்பட்ட நிரல் சராசரியில் நீர் மின் உற்பத்தியின் அத்தகைய குறைவிற்கான, மின் தொகைக்குச் சமமான தொகையானது, ‘‘நீர் மின் உற்பத்திச் சமநிலை நிதியத்திலிருந்து“ உரிமம்தாரரின் வருவாய் கணக்குக்கு மாற்றப்படுதல் வேண்டும். அந்த நிதியமானது போதுமானதாக இல்லாதிருக்குமானால், நிதியத்திலிருந்து கிடைக்கக் கூடிய அளவுக்கு மட்டுமே சரிகட்டப்படும்.

(7) மின்பகிர்வு உரிமம்தாரர் / தமிழ்நாடு மின்சார வாரியம், குறைவு, ஏதேனுமிருப்பின், அதனைப் பூர்த்தி செய்வதற்கு, அரசால் பேணி வரப்படும் ‘‘நீர் மின் சுழற்சி ஆதரவு உதவித் தொகை நிதியத்திலிருந்து“ கூட பணம் எடுத்தல் வேண்டும்.

(8) மேலேயுள்ளவாறு, குறைவு இன்னும் சரிகட்ட முடியாதிருக்கும் நேர்வில், அத்தகைய குறைவு, முன் கொணரப்படுவதற்கு / ஒழுங்குமுறைச் சொத்தாக வரும் ஆண்டுகளில் சரிகட்டப்படுவதற்கு அனுமதிக்கப்படும்.

**(தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் ஆணைப்படி)**

**ஆர். பாலசுப்பிரமணியன்**
செயலாளர்